# தமிழ்ப்பள்ளிகளில் கணினி மைய உருவாக்கமும் கல்வி வளர்ச்சியில் அதன் பங்கும்

குணசேகரன் கந்தசாமி
தகவல் தொடர்பு தொழில்நுட்ப மைய ஒருங்கிணைப்பாளர்
கோலக்கிள்ளான் பெர்சியாரான் ராஜா மூடா மூசா தமிழ்ப்பள்ளி

---

## 1. முன்னுரை

கோலக்கிள்ளான் பெர்சியாரான் ராஜா மூடா மூசா தமிழ்ப்பள்ளி (வாட்சன் தமிழ்ப்பள்ளி( 1990 முதற்கொண்டு கணினி மையம் இயங்கி வருகின்றது. இக்கணினி மையம் சிறப்பாகவும் செயற்பட்டு வருகின்றது. அந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 2. தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தின் பங்கு

தகவல் பரிமாற்றம் என்பது மாந்தர் தோன்றிய காலந் தொட்டே நடைமுறை படுத்தப்பட்டு வருகின்ற ஒரு செயல்முறையாகும். சைகை காட்டுதல், புகை போடுதல், பறை கொட்டுதல், தூது அனுப்புதல், தந்தி, கம்பியில்லாத் தந்தி, வானொலி, தொலைபேசி என வளர்ந்து இன்று தகவல் தொடர்பு தொழில்நுட்பம் என அம்முறைமை காலத்தோடு பலவாறாக மாற்றங்கண்டு வந்திருக்கின்றது.

இம்மாற்றங்களுள் உலகலாவிய அளவில் இன்று பரவி இருப்பது கணினி யுகமாகும். அது தகவல் யுகமாக திரிந்த இன்று தகவல் தொடர்பு தொழில் நுட்பமாக பரிமாணித்துள்ளது.

## 3. கல்வியில் தகவல் தொடர்பு தொழில் நுட்பம்

தகவல் தொடர்பு தொழில் நுட்பம் நம் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பெருமாற்றத்தை உண்டு பண்ணியுள்ளது என்பதை நாம் கண் கூடாகக் காணுகின்ற விந்தையாகும். கல்வி மட்டுமென்ன அதற்கு விதிவிலக்கா! கற்பித்தலில் இது ஆற்றிவரும் பங்கு சொல்ல முடியாததாகி விட்டது. கல்வியில் கணினியின் பங்கினைக் கணினிக் கல்வி, கணினி வழி கல்வி என இரு கூறுகாளாப் பகுக்கலாம்.

### 3.1 கணினிக் கல்வி

கணினிக் கல்வி என்பது வன்பொருள் மற்றும் மென்பொருள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் முறைமை உள்ளடக்கியதாகும்.

வன்பொருள் (Hardware)

கணினி பாகங்களைப் பற்றியும் அவற்றின் செயல்பாடுகளையும் அறிந்து கொள்ளுதல்.

மென்பொருள் (Software)

நடைமுறை தேவைக்கான மென்பொருள் அறிவையும் அதனை இயக்கும் திறனையும் பெறுதல். இந்த மென்பொருளில் காணப்படும் கூறுகள் Mouse Tutor, Ms Word, Excel, Powerpoint, Paint Brush. இதைத் தவிர்த்து இணையம் மற்றும் video conferencing பயன்பாட்டினையும் அறிந்து கொள்வதாகும்.

## 4. கணினி மையத்தின் தேவை

தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தமையால் எங்கள் பள்ளியில் ஒரு கணினி மையத்தை உருவாக்க வேண்டும் என்ற வேட்கை பெற்றோர், ஆசிரியர் சங்கத்தினரிடையேயும், ஆசிரியர்களிடையேயும் மேலோங்கி இருந்தது.

4.1 கணினி மையத்தின் உருவாக்கம்

ஒரு கணினி மையத்தின் உருவாக்கும் முதல்படியாக கணினி மையங்கள் பள்ளிகளில் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதனை ஆராய்ந்தோம்.

எங்கள் ஆய்வின்படி பள்ளிகளில் தனியார் நிறுவனங்கள் நடத்தும் கணினி வகுப்புகளில் அதிகமான பலவீனங்கள் காணப்பட்டன. ஆகவே எங்கள் பள்ளிகளில் கணினி மையத்தைப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகத்தில் நடத்தத் திட்டமிட்டோம். இவ்வாறு நடத்தும் பட்சத்தில் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் மட்டுமில்லாது இப்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், இப்பள்ளியின் முன்னாள் மானவர்கள் போன்றோர் அடையும் நன்மைகள் பலவாகும். எனவே, பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலம் கணினி மையத்தை உருவாக்கினோம்.

## 5.0 நிதி வணங்கள்

5.1 கணினி மையத்தை உருவாக்கும் பொருட்டு ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது.

5.2 பல்வேறு திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு தனிநபர் அணுகுமுறை (Individual approach) ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதாவது தனிநபர்களை நேராகக் கண்டறிந்து அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் மற்றும் திட்டம் தொடர்பான கையேடுகளைச் சமர்ப்பித்து விளக்கம் அளித்து, நன்கொடை பெறுதல்.

5.3 வேண்டுகோள் கடிதங்கள், திட்டம் பற்றிய கையோடுகள், தேவைப்படும் கணினியின் சக்தி/அளவு (configurations) போன்ற விபரங்கள் அடங்கிய குறிப்பேடுகள் போன்றவை தயாரிக்கப்பட்டு ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமும் கொடுக்கப்பட்டன.

பின் இணைப்பு 1 கடிதம்
பின் இணைப்பு 2. நன்கொடையாளர் பாரம்
பின் இணைப்பு 3,4,5,6 கையேடு - முதல், இரண்டு, மூன்றாம், நான்காம் பக்கங்கள்

5.4 ஆயிரம் ரிங்கிட்டுக்கு மேல் நன்கொடி அளிப்பவர்களின் பெயர் கணினி மையத்தில் பொறிக்கப்படும் என்ற உறுதியும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் வாயிலாக நன்கொடையாளர்களின் பெயர்கள் பள்ளியின் லரலாற்றில் இடம் பெறுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

5..5 தொடர்பு நடவடிக்கையான பெற்றோர் ஆசிரியர் சங்கம் தன் முழு ஈடுபாட்டினை உணர்த்தும் வகையில் சங்கத்தின் சேமிப்பில˙ இருந்து RM 10,000யும், ஆரம்ப வசூலான 20,000யும் கொண்டு மையத்தைச் சீரமைப்புச் செய்தது. குளிர்ச்சாதனங்கள் பொருத்துதல், கம்பளம் விரித்தல், தளவாட பொருட்களைப் பொருத்துதல் போன்ற தொடக்க வேலைகள்

செய்யப்பட்டு ஏற்கனவே சங்கத்திடம் இருந்த 12 கணினிகளைக் கொண்டு வகுப்பு தொடங்கப்பட்டது. இதனை நேரில் வந்து பார்த்த நன்கொடையாளர்கள் சங்கத்தின் மீதும் அதன் நடவடிக்கைகளையும் பாராட்டினர்.

5.6 கணினி மையம் செயல் படத் தொடங்கியதும் அதிலிருந்து ஒரு கணிசமான வருமானம் கிடைத்து வருகின்றது. இதனைக் கொண்டு கணினி மையத்தை மேலும் சீர் படுத்துதல், கணினிகளைப் பராமரிக்கவும், தேவைப்படும் துணைப் பொருள்களை வாங்கவும், கணினி பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கவும், மின்சாரம் மற்றும் இணையத் தொடர்பு கட்டணம் கட்டவும் முடிகிறது. அதுமட்டுமில்லாமல் அந்நிதி பள்ளியின் வேறுபல திட்டங்களுக்கும் செலவிடப்பட்டு வருகின்றது. பெற்றோர் ஆசிரியர் சங்கமே கணினி மையத்தை நடத்துவதனால்தான் இவை சாத்தியமாகின்றன.

5.7 ஆகவே, 1990-ஆண்டில் 250 மாணவர்கள் மட்டுமே கணினி கல்விக் கற்று வந்த நிலைமையினை மாற்றியமைத்து எல்லா மாணவர்களும் கணினிக் கல்வி பெறச் செய்ய வேண்டும் எனும் உயரிய நோக்குடன் தகவல் தொழில் நுட்ப உலகை நோக்கி பெர்சியாரான் ராஜா மூடா மூசா தமிழ்ப்பள்ளி எனும் கருப்பொருளை மையமாக வைத்து எல்லா மாணவர்களும் கணினி தொழில் நுட்பத்தைக் கற்கச் செய்தோம்.

## 6.0 மனித வளம்

6.1 கணினி வகுப்பை வழி நடத்திச் செல்ல காலையில் ஒருவர் மாலையில் ஒருவர் என இருவர் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தால் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மாதச் சம்பளமும் வழங்கப்படுகிறது.

6.2 இவர்களுக்குத் துணையாக வகுப்பு ஆசிரியர்களும் முன்னாள் மாணவர்களும் பயன்படுத்தப் படுகின்றனர். இவர்கள் தங்கள் கணினித் திறனை வளர்த்துக் கொள்ளும் நோக்கில் பல குறுகிய கால பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

6.3 பாடத்திட்ட உருவாக்கிலும், தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கும் இத்துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களின் துணை பெறப்பட்டது.

## 7.0 அமைத்தல்

7.1 தகவல் தொழில் நுட்ப மையம் திட்டமிட்டப் சிறப்பாக இயங்க ஒரு செயல்வை குழு அமைக்கப்பட்டுள்ளது. இச்செயல்வையின் நோக்கம்

-- வகுப்புகளைக் கண்காணித்தல்
-- கணினிகளைப் பராமரித்தல் (பழுதுடைய கணினிகளைக் கணினி ஆசிரியர்களே சரி செய்வார்கள. அவ்வாறு முடியாத பட்சத்தில் பழுது பார்ப்பதற்கு அனுப்பப்படும்)
-- கணினி மைய தேவைகளைக் கண்டறிந்து, பூர்த்தி செய்தல்
-- மாணவர்கள் பங்கு பெறும் வண்ணம் மேலதிகமாகத் திட்டங்களை உருவாக்குதல் (போட்டிகள், இணையப் பக்கத்தில் படைப்புகளைப் படைத்தல்)
-- ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அவ்வப்போது தேவையான கணினி பயிற்சிகளை அளித்தல்
-- இப்பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள் தங்களுடைய கணினி பயிற்சிகளைத் தொடர ஊதிகள் ஏற்பாடு செய்தல்

-- அவ்வப்போது வெளியே நடைபெறும் புதிய கணினி பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு, அதில் பெறும் அறிவினை மற்றவர்களுக்கும் பரவச் செய்தல்
-- மாணவர்களிடம் கட்டணத்தை வசூல் செய்தல்

## 8. அடைந்த பயன்கள்

8.1 மாணவர்கள்

-- தகவல் தொழில் நுட்ப அறிவைப் பெற்றிருக்கின்றனர்
-- சுயமாக இயங்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றனர்
-- சுயமதிப்பு உடையோராகத் தம்மை கருதுகின்றனர்.
-- தன்மதிப்பு மிக்கவர்களாகத் திகழ்கின்றனர்.
-- பள்ளிக்கு மாணவர்களின் வருகை சிறப்பாக இருக்கின்றது.
-- இதன்வழி பிற பாடங்களையும் சிறப்பாகக் கற்க முடிகிறது.
-- கற்றல் கற்பித்தல் மகிழ்ச்சியாக அமைகிறது.
-- இடைநிலைப் பள்ளியில் சிறப்பாக திகழ வாய்ப்பிருக்கிறது.

8.2 ஆசிரியர்கள்

-- தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்றிருக்கின்றனர்.
-- கற்றல் கற்பித்தலைச் சிறப்பாக ஆற்றமுடிகிறது.
-- தேர்வுத்தாட்களைச் சிறப்பாகத் தயாரிக்க முடிகிறது.
-- தேர்வு முடிவுகளைப் பகுத்தாய்ந்து தொடர் நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்கு முடிகிறது.

## 9.0 ஆலோசனை

நாங்கள் முன்னோடியாகச் செயல்பட்டதனால் பல சிரமங்களுக்கு ஆளாக நேர்ந்தது. எனினும் பலரின் ஒத்துழைப்பினாலும் திட்டமிட்டு முறையாகச் செயல் பட்டமையாலும் அச்சிரமங்களைச் சமாளித்துள்ளோம். எங்களுடைய அனுபவம் சில பள்ளிகளுக்கு நல்ல வழிகாட்டியாக அமைந்ததனால் அவர்கள் எங்களைவிட விரைவாகவும் எளிதாகவும் கணினி மையங்களை அமைத்து வெற்றி கண்டு வந்துள்ளனர். இதுபோல் யார் எங்களை நாடி வந்தாலும்ம எங்களுடைய அனுபவத்தைப் பாடமாக வைத்து அவர்களுக்கு நல்லாலோசனைகளைக் கூறத் தயாராக இருக்கிறோம்.

## 10.0 பரிந்துரை

எல்லாத் தமிழ்ப்பள்ளிகளும் தமக்கென கணினி மையத்தைக் கொண்டிருக்க வேண்டும். பள்ளிகளுக்கிடையே தொடர்பு கொள்ளவும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் இதன் வழி கற்றல் கற்பித்தலைத் திறம்பட்ச் செய்யவும் ஏதுவாகும்.

தொடர்பு
K. Gunasekaran, Watson Tamil School, SJK (Tamil) Persiaran Raja Muda Musa,
42000 Pelabuhan Klang, Selangor Darul Ehsan, Malaysia